**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

OS.No.799/2021 பெயர்- சந்திரசேகரன் நாள்.08.02.2024

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1ம் பிரதிவாதி தங்கவேலை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 15 வருடங்களாக தெரியும். எந்த வகையில் அவர் எனக்கு பழக்கம் என்றால் எங்களது வீட்டிற்கு அருகில் குடியிருந்த வகையில் பழக்கம். அவர் ஜவுளி தொழில் செய்து வருகிறார். நாளது தேதி வரை அவர் ஜவுளி தொழில்தான் செய்து வருகிறார். மணிகண்டன் Fafrics என்ற பெயரில் செய்து வந்தார். தற்சமயம் என்ன பெயரில் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. நான் கடன்கொடுத்ததாக சொல்லப்படும் தேதி என்னவென்றால் 04.08.2016 ஆகும். அந்த தேதியில் அவர் பெரியசேமூரில் குடியிருந்தார். தற்போதும் அவர் அங்குதான் குடியிருக்கிறார். தாவா சொத்து பெரியசேமூரில்தான் உள்ளது. தாவா சொத்தில்தான் அவர் குடியிருக்கிறார். வழக்கு தாக்கல் செய்வதற்கான சங்கதிகளை நான்தான் கூறினேன். 1ம் பிரதிவாதியின் விலாசத்தை என் வழக்கறிஞரிடம் நான்தான் கூறினேன் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி கொஞ்சநாள் வேற இடத்தில் குடியிருந்தார். எந்த தேதியில் பிரதிவாதி வேற விலாசத்தில் குடியிருந்தார் என்றால் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வேற இடத்தில் அவர் குடியிருந்தார், சரியான தேதி சொல்ல இயலவில்லை. மீண்டும் எந்த தேதியில் அவர் மேற்படி விலாசத்திற்கு வந்தார் என்று தெரியுமா என்றால் குறிப்பாக சொல்ல இயலவில்லை. 14.11.2018க்கு பின்னிட்டு அவர் தாவா சொத்தில் குடியிருக்கவே இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மீது காசோலை உரிமையியல் வழக்கு தாக்கல் செய்தது எப்போது என்றால் அதுவும் 2018 தான். அதில் 1ம் பிரதிவாதியின் முகவரியாக நசியனூர் ரோட்டில் உள்ள விலாசம் குறிப்பிட்டுள்ளேன். நசியனூர் ரோட்டில் காமதேனு நகரில் குடியிருந்தார். நான் சொன்னதுபோல் 1ம் பிரதிவாதி அந்த விலாசத்தில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கே நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து, இந்த வழக்கின் 2ம் பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கில் தாக்கல் செய்த வழக்கு என்றாலும், மேற்படி வழக்கிற்கான விவரங்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதிதான் சொல்லியுள்ளார் என்றாலும் சரியல்ல. அதனால்தான் மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதியின் விலாச விவரங்கள் எப்படி குறிப்பிடப்பட்டுள்ள என்ற விவரமே எனக்கு

தெரியவில்லை என்றால் சரியல்ல. காசோலை திருப்பப்பட்டதற்கு பின்னிட்டு எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் 24.02.2018 ஆகும். அதன் பின்னிட்டு காசோலை குற்றவியல் வழக்கு 1 ம் பிரதிவாதியின் மீது தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 06.12.2018 ல்தான் காசோலை மீதான உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான், அவர் பணம் தருவதாக கூறிகொண்டே இருந்தார், அதனால் தாமதமாகிவிட்டது. மேற்படி வழக்கு எண்.871/2018 ல் ஜப்தி மனு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மனுவில் பிரதிவாதி எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி ஆஜர் ஆகாத காரணத்தினால் ஜப்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் ஆமாம். ஜப்தி உத்தரவை நிறைவேற்றுவதற்கான படி சார்பதிவாளர் அலுவகத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் அதற்குள்ளாக அவர் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்துவிட்டார். எத்தனை நாளைக்குள் அவர் ஜப்தி உத்தரவை நீக்கரவு செய்ய மனு தாக்கல் செய்தார் என்றால் நினைவில் இல்லை. மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்த மனுவுடன் 1 ம் பிரதிவாதி மேற்படி வழக்கில் அவருடைய வழக்குரையை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரையிலேயே 1 ம் பிரதிவாதி தாவா சொத்தை 2 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டதாக குறிப்பிட்டிருந்தாரா என்றால் ஆமாம். 2019 லேயே எதிர்வழக்குரை தாக்கல் செய்துவிட்டார் என்ற நிலையில் தாவா சொத்தை 1 ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்ட விவரம் 2019 லேயே எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2021 ல்தான் மேற்படி கிரய பத்திரத்தை ரத்து செய்யக்கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.